1982 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது தேசிய நெடுஞ்சாலை பற்றியபிரச்னை. இது மத்திய அரசின் திட்டத்தின் கீழ் செய்யப்படுகிறது. இணைப்புச் சாலை அமைப்பதைப் பொறுத்தவரையில், இந்தநிதியில் இருந்து கிராமங்களுக்குப் போடமுடியாது. அதற்காக நாம் தன்னிறைவுத் திட்டம் வைத்து இருக்கிறோம். அதேபோல் ரூரல் ரோட் ஓர்க்ஸ் என்று தனியாக வைத்து இருக்கிறோம். அந்தப் பணிகள் மூலமாக இந்த இணைப்புச்சாலைகள் போடுவதைச் செய்யலாம்.

தன்னிறைவு திட்ட வேலைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொறியாளர்கள்.

* வினா எண் 709—திருமதி டி. யசோதா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தன்னிறைவுத் திட்ட வேலைகளுக்கு சிவில் இன்ஜினியர்களை (Civil Engineers) நியமிக்காமல் மெக்கானிக்கல் இன்ஜினியர்களை (Mechanical Engineers) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) இதனால் வேலைகள் காலதாமதம் ஏற்படுகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தன்னிறைவுத் திட்டத்தில் பணிபுரியும் உதவிக் கோட்டப் பொறியாளர்களில் சுமார் 23.9 சதவிகிதமும் உதவிப்பொறியாளர்/இளநிலைப்பொறியாளர் தொகுதியில் சுமார் 3 சதவீதமும் மட்டுமே மெக்கானிக்கல் பொறியியல் தகுதி வாய்ந்தவர்கள். மற்றவர்கள் சிவில்பொறியாளர்கள்.

(ஆ) இல்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெக்கானிக்கல் என்ஜினியர்களாக இருப்பவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்க வருகின்ற நேரத்தில், தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கட்டிடம் கட்டுவது, சாலை அமைப்பது, குளம் வெட்டுவது போன்ற ஆரம்ப கட்ட வேலைகளைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருப்பதால், அந்தப் பணிகள் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று அறிகிறேன். அதைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் காலதாமதம் என்றுமே இல்லை. அது மட்டும் அல்லாது சிவில் என்ஜினீயர்களும், மெக்கானிக்கல் என்ஜினீயர்களும் நாம் போட்டிருக்கக் கூடிய எண்ணிக்கை தொகையினை ஏற்கனவே சொன்னேன். ஏறக்குறைய 163 உதவிக் கோட்ட பொறியாளர்களில் 39 பேர் தான் மெக்கானிக்கல் என்ஜினீயர்கள். அதே போல இளநிலை பொறியாளர்களில் 324 பேர்களில் 10 பேர்தான் மெக்கானிக்கல் என்ஜினீயர்கள். ஆகவே இவர்கள் மூலம் கண்டிப்பாக தன்னிறைவுத் திட்டம் தடைபடாது. ஏற்கெனவே நாம் காலக் குறியீடு செய்து 31—3—1982-க்குள் வேலைகள் எல்லாம் முடிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். ஏறத்தாழ 95 சதவீதம் வேலைகள் முடிந்துவிட்டன. இன்னும் இருக்கும் சில இடங்களில் அவற்றை ஒரு மாத காலத்திற்குள் முடித்து தருவதாக தெரிவித்திருக்கிறார்கள். கண்டிப்பாக காலதாமதம் ஏற்படாது என்று நான் நினைக்கிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெக்கானிக்கல் என்ஜினீயரிங்கை படித்து வருகிறவர்கள், சிவில் என்ஜினீயரிங் துறையிலே ஏதாவது ஒரு பாடத்தை படித்துவிட்டு, பிறகு இதில் பொறுப்பேற்றிருக்கிறார்களா? ஏனெனில் தற்போது படித்து வருகின்றவர்களுக்கு சிவில் எஞ்சினியரிங்கில் உள்ள அந்த சப்ஜெக்ட், இதிலே இல்லை—என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் அப்படி இல்லை. ஏனென்று சொன்னால் சிவில் என்ஜினீயரிங்காக இருந்தாலும், மெக்கானிக்கல் என்ஜினீயரிங்காக இருந்தாலும், பொதுவாக அடிப்படையில் அதிகமாக மாற்றங்கள் இல்லை. ஆகவே சிவில் என்ஜினீயர்களாக இருக்கிறவர்களுக்கு மெக்கானிக்கலும் ஓரளவிற்குத் தெரியும். இப்போது கூட அக்ரிகல்சுரல் என்ஜினீயரிங் சர்வீசில் இருக்கிறார்களே, பி. எஸ். சி. (அக்ரி.) என்று அவர்களுக்கு கூட ரோடு போடத் தெரியும். அதற்குரிய பாடங்களை அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏற்கனவே நான் விவசாயத்துறை அமைச்சராக இருந்த நேரத்தில் பி. எஸ். சி. (அக்ரி.) படித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு இது பற்றிய கொள்கை விளக்கங்கள் பாடமாக கொடுக்கப்பட்டிருப்பதை நான் அறிவேன். அதிலே அதிகமாக வித்தியாசம் இல்லை. இந்த ரோடு போடுவதைப் பொருத்த வரையில் இரண்டு பிரிவுகளுக்கும் பாடங்களில் அதிகமாக வித்தியாசம் இல்லை. ஆகவே, இந்த நிலையில் எந்தவிதமான கால தாமதமும் ஏற்படாது.

1982 ஏப்ரல் 1]

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழாக சிவில் என்ஜினீயருக்குப் பதிலாக, மெக்கானிக்கல் என்ஜினீயரிங் படித்தவர்களைப் போட்டிருப்பது பற்றி கேள்வி. சிவில் என்ஜினீயரிங்கிலேயே, டிப்ளோமோ பொறியியல் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே. அவர்களைத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொண்டு, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிவதற்கு அரசு பயன் படுத்த முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏற்கனவே பட்டப்படிப்பு படித்தவர்களுக்கும், டிப்ளோமா படித்தவர்களுக்கும் இடையில் அவர்களுக்குள்ளாகவே சர்ச்சை இருந்துக் கொண்டிருக்கிறது. யார் முக்கியமானவர்கள் யாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதிலேயிருந்து, கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய நிலையில் நெடுஞ்சாலைத் துறையும், பொதுப்பணித் துறையும் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தக் கொள்கையில் முடிவு எடுத்தபின் இதில் அறிவிக்கலாம்.

இடைப்பாடி நகரில் பல் மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 710—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி நகரில் பல் மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில் 1981, 1982 ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்திலே ''இல்லை'' என்று சொன்னார்கள். இன்று ஏப்ரல் முதல் தேதி என்ற காரணத்தால் இல்லை என்று சொல்கிறார்களோ என்று எண்ணுகிறேன்....... (குறுக்கீடு).

TRUTH ALONE TRIUMPHS